©
தமிழ்நாடு அரசு
2016

கையெழுத்துத் தொடர்

# நிதி (படிகள்)த் துறை

## அரசு ஆணை எண்:1 நாள் 04.01.2016

(*மன்மத, மார்கழி–19, திருவள்ளுவர் ஆண்டு 2046*)

மிகை ஊதியம் – சிறப்பு மிகை ஊதியம் – 2014–2015 ஆம் ஆண்டு – அனுமதி – ஆணைகள் – வெளியிடப்படுகின்றன.

---

படிக்கவும்:–

1. அரசு ஆணை (நிலை) எண்.9 நிதி (படிகள்)த் துறை, நாள் 08.1.2015
2. மத்திய அரசு, புது டெல்லி, நிதியமைச்சகம், செலவுத்துறையின்அலுவலகக் குறிப்பாணை எண். 7 / 24 / 2007/E-III (A), நாள்.16.10.2015,

*****

**ஆணை:-**

முறையான காலமுறைச் சம்பளம் பெறும் அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசின் மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் ஆகியோருக்கு திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை 2014–2015 ஆம் ஆண்டிற்கு மிகை ஊதியமாக வழங்க அரசு முடிவெடுத்துள்ளது.

2. 2013–2014 ஆம் ஆண்டு வரை 'இ' மற்றும் 'ஈ' பிரிவைச் (C & D Group) சார்ந்த பணியாளர்களுக்கு, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகையை மிகை ஊதியமாக கணக்கிட்டு, உச்ச வரம்பினை ரூ.3,000/– ஆகக் கொண்டு, மிகை ஊதியத்தொகை வழங்கப்பட்டது. இதனை பின்பற்றி தற்போது முறையான காலமுறைச் சம்பளம் பெறும் 'இ' மற்றும் 'ஈ' பிரிவைச் (C & D Group) சார்ந்த அனைத்து நிரந்தர மற்றும் தற்காலிக அரசுப் பணியாளர்கள், உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள், அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் உட்பட்ட பணியாளர்கள் ஆகியோருக்கு 2014–2015–ஆம் நிதியாண்டுக்காக, திங்களொன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில், 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை மிகை ஊதியமாக வழங்கப்படவேண்டும் என அரசு ஆணையிடுகிறது. மிகை ஊதியம் 31.3.2015 ஆம் நாளன்றுள்ளவாறான ஊதியத்தின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். மாதாந்திர ஊதியம் ரூ.3,000/– (ரூபாய் மூவாயிரம் மட்டும்) என்பதை உச்சவரம்பாகக் கொண்டு, மிகை ஊதியத்தொகை கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதங்களில் / திருத்திய சம்பள வீதங்களில் சம்பளம் பெறுபவர்களைப் பொறுத்தவரையில், திங்களொன்றுக்கு ரூ.3,000/– என்ற உச்ச வரம்பிற்கு உட்பட்டு அவர்கள் பெற்ற ஊதியத்தின் அடிப்படையில் மிகை ஊதியம் கணக்கிடப்படவேண்டும். இந்த உச்சவரம்பு திருத்திய சம்பள வீதங்களுக்கு முந்தைய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் அல்லது திருத்திய சம்பள வீதங்களில் பெற்ற ஊதியங்கள் இவற்றில் எந்த வகை ஊதியமாக இருப்பினும் இரண்டிற்குமே பொருந்தும்.

3. பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஊதிய விகிதம், அனைத்திந்தியப்பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட 'அ' மற்றும் 'ஆ' பிரிவைச் (A & B Group) சார்ந்தவர்கள், இந்த மிகை ஊதியத் திட்டத்தின் கீழ் வரமாட்டார்கள். அவர்கள் எந்தவொரு மிகை ஊதியத் தொகையைப் பெறவும் தகுதி உடையவர்கள் அல்லர். இந்த வகைப் பணியாளர்களுக்குச் சிறப்பு மிகை ஊதியம் வழங்க அரசு முடிவெடுத்து, பல்கலைக்கழக மானியக்குழு / அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு / இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் சம்பள விகிதம், அனைத்திந்தியப்பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட 'அ' மற்றும் 'ஆ' பிரிவைச் (A & B Group) சார்ந்த பணியாளர்களுக்கு இந்த ஆண்டும் சிறப்பு மிகை ஊதியமாக ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) வழங்க அரசு முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

4. 2014–2015 ஆம் நிதியாண்டில் குறைந்த பட்சம் 240 நாட்கள் அல்லது அதற்கு மேலாக பணிபுரிந்த சில்லரைச் செலவினத்தின் கீழ் மாத அடிப்படையில் நிலையான ஊதியம் பெற்று வந்த முழு நேர மற்றும் பகுதி நேரப் பணியாளர்கள், தொகுப்பூதியம் பெற்று வந்த பணியாளர்கள், தொகுப்பூதியம்/சிறப்பு கால முறை ஊதியம் பெற்று வந்த சத்துணவுத் திட்டப் பணியாளர்கள் / ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி பணிகள் திட்டத்தில் பணிபுரியும் பணியாளர்கள் (அங்கன்வாடி பணியாளர்கள், குறு அங்கன்வாடி பணியாளர்கள்) கிராம உதவியாளர்கள் (Village Assistants), ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சி துறையில் சிறப்பு கால முறை ஊதிய விகிதத்தில் (special time scale of pay) பணிபுரியும் பஞ்சாயத்து உதவியாளர்கள் /எழுத்தர்கள், ஒப்பந்த பணியாளர்கள், ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் தற்காலிக உதவியாளர்கள், தினக்கூலி அடிப்படையில் பணியாற்றும் மற்றும் ஒரு பகுதி தினக்கூலிகளாக பணியாற்றி பின்னர் தொடர்ந்து நிரந்தர பணியாளர்களாக பணியாற்றியவர்களுக்கும் சிறப்பு மிகை ஊதியம் ரூ.1,000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) அனுமதிக்கத்தக்கதாகும்.

5. மாநில அரசில் இருந்து நிறுவனங்கள், வாரியங்கள் ஆகியவற்றில் அயல்பணியில் பணியாற்றி வருபவர்கள் சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் இருந்து மிகை ஊதியம் / பரிவுத் தொகை பெறாமல் இருந்தால் அவர்கள் இந்த மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர் ஆவார்.

6. மேலே பத்தி 2 முதல் 5 வரையில் குறிப்பிடப்பட்டுள்ள மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் இந்த அரசாணையின் இணைப்பில் வரையறுக்கப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு உட்பட்டு அனுமதிக்கத்தக்கதாகும்.

7. மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் குறித்த செலவு, சம்பந்தப்பட்ட துறையின் தொடர்புடைய பணிக்கணக்குத் தலைப்பின் கீழ் நேர்விற்கேற்ப "01. சம்பளங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின் கீழ் வரும் "04. ஏனைய படிகள்" என்ற உள்நுணுக்கத் தலைப்பின்கீழ் அல்லது "02. ஊதியங்கள்" என்ற நுணுக்கத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

8. 2003 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட தற்காலிக உதவியாளர்களுக்கான சிறப்பு மிகை ஊதியம் தொடர்பான செலவினம் ''33. தொழில்முறை சிறப்பு பணிகளுக்கு தொகை கொடுத்தல்'' ''04. ஒப்பந்த ஊதியம்'' பணிக்கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும்.

9. 2015–2016 ஆம் நிதியாண்டில் சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்புகளின் கீழ் போதிய நிதியொதுக்கம் செய்யப்பட்டுள்ளது. எனினும், கூடுதல் நிதியொதுக்கம் தேவைப்படும் பட்சத்தில், சம்பந்தப்பட்ட கணக்கு தலைப்புகளின் கீழ் தேவையான கூடுதல் நிதியொதுக்கம் 2015–2016–ம் நிதியாண்டிற்கான இறுதி திருத்த நிதியொதுக்கத்தில் சேர்க்கப்படும். அத்தகைய நிதியொதுக்கத்தினை எதிர்நோக்கி தேவையான தொகையினை பெற்று செலவு செய்யலாம்.

10. இந்த ஆணை கூடுதல் நிதி ஒதுக்கப் பேரேடு எண்.1840 (ஆயிரத்து எண்ணூற்று நாற்பது) ன் படி வெளியிடப்படுகிறது.

**(ஆளுநரின் ஆணைப்படி)**

**க.சண்முகம்**
அரசு முதன்மைச் செயலாளர்

**பெறுநர்**
அனைத்து அரசுச் செயலாளர்கள்.
செயலாளர், சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை–9.
காப்பாளர், ஆளுநர் மாளிகை, ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநரின் செயலாளர், ராஜ்பவன், சென்னை–22.
ஆளுநர் செயலகம், ராஜ்பவன், சென்னை–22.
அனைத்துச் செயலகத் துறைகள் (அலுவலக நடைமுறை மற்றும் பட்டியல் பிரிவுகள்).
நிதித்துறையிலுள்ள பிரிவுகள் அனைத்தும்.
அனைத்து துறைத் தலைவர்கள்.
மாநில தகவல் ஆணையம், எண்.2, தியாகராய சாலை, எல்டாம்ஸ்ரோடு சந்திப்பு, சென்னை–18.
அனைத்து மாவட்ட ஆட்சியர்கள்.
அனைத்து மாவட்ட நீதிபதிகள் / அனைத்து முதன்மை நீதித்துறை மாஜிஸ்டிரேட்கள்.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18.
முதன்மை மாநில கணக்குத் துறைத் தலைவர் (கணக்குகள் மற்றும் உரிமைத் தொகை), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–I), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18.
மாநில கணக்குத் துறைத் தலைவர் (தணிக்கை–II), சென்னை–18 (பெயரில்).
மாநில கணக்குத் துறைத் தலைவர் (உதபி), சென்னை–9 / மதுரை.
முதன்மைச் செயலாளர்/ஆணையர், கருவூலக் கணக்குகள் துறை, சென்னை–15.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (கிழக்கு), சென்னை–5.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தலைமைச் செயலகம்), சென்னை–9.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்குகள் அலுவலர் (வடக்கு), சென்னை–79.
சம்பளக் கணக்குகள் அலுவலர், மதுரை 625 001.
அனைத்து கருவூல அலுவலகங்கள்.
அனைத்துத் துணைக் கருவூல அலுவலகங்கள்.
தலைவர், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சென்னை–6.
ஒழுங்கு நடவடிக்கைகள் நடுவர் மன்ற ஆணையாளர், எண்.6, மாணிக்கேஸ்வரி சாலை, சென்னை–10.
பதிவாளர், உயர்நீதி மன்றம், சென்னை–104.
அனைத்து பல்கலைக்கழகங்கள் மற்றும் கோயம்புத்தூர் வேளாண்மைப் பல்கலைக் கழகம் ஆகியவற்றின் பதிவாளர்கள்.

அரசுக்கு சொந்தமான அனைத்து நிறுவனங்கள் / சட்டப்படியான வாரியங்கள்.
ஆணையாளர்,மாநகராட்சி, சென்னை /மதுரை/ கோயம்புத்தூர் / திருச்சிராப்பள்ளி / சேலம் / திருநெல்வேலி / ஈரோடு / திருப்பூர்.
அனைத்து கோட்ட வளர்ச்சி அலுவலர்கள். / அனைத்து வட்டார வளர்ச்சி அலுவலர்கள்.
அனைத்து நகராட்சி ஆணையாளர்கள்.
அனைத்து கோட்டாட்சியர்கள். / அனைத்து வட்டாட்சியர்கள்.
அனைத்து முதன்மை கல்வி அலுவலர்கள்.
திட்ட ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு ஒருங்கிணைந்த சத்துணவுத் திட்டம், தரமணி, சென்னை.
அனைத்து அங்கீகரிக்கப்பட்ட பணிச்சங்கங்கள்.

**நகல் பெறுநர்**

நிதி (அ.ந.மு.I)/(அ.ந.மு.II)/(அ.ந.மு.III)/(அநமு.பல்வகை)/(ஓ.கு.தீ)/( ஊ.கு.)/(வரவு செலவு–பொது II) /(வரவு செலவு–பல்வகை)/(பொது)த் துறை, சென்னை–9.
அரசு தலைமைச் செயலாளரின் நேர்முக செயலாளர், சென்னை–9.
அரசு முதன்மைச் செயலாளரின் நேர்முக செயலாளர், நிதித் துறை, சென்னை–9.
முதலமைச்சர் அவர்களின் செயலாளர், சென்னை–9.
மத்திய அரசுச் செயலாளர், உள் துறை அமைச்சகம், புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (பொருளாதார விவகாரங்கள் துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (செலவுத்துறை), புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர், நிதி அமைச்சகம் (வங்கிகள் வருவாய்த் துறை) புதுடில்லி.
மத்திய அரசுச் செயலாளர்,வெளிவிவகார அமைச்சகம், புதுடில்லி.
முதுநிலை ஆராய்ச்சிஅலுவலர், சம்பளஆராய்ச்சிப் பிரிவு,
நிதி அமைச்சகம் (செலவுத் துறை),அறை எண் 261, வடக்கு பிளாக், புதுடில்லி.
இருப்புக்கோப்பு/உதிரி நகல்கள்.

**// ஆணைப்படி; அனுப்பப்படுகிறது//**

**பிரிவு அலுவலர்**

## இணைப்பு

i) இந்த ஆணைகளின்படி மிகை ஊதியம் வழங்குவதற்கான ஊதியங்களை 31.3.2015 அன்றுள்ளவாறான அடிப்படைச் சம்பளம், சிறப்புத் தனிச் சம்பளம், தர ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். திருத்திய சம்பள வீதத்திற்கு முந்தைய சம்பள வீதத்திலேயே சம்பளம் பெறும் பணியாளர்களைப் பொறுத்தவரையில் 31.3.2015 அன்றுள்ளவாறான அடிப்படைச் சம்பளம், தனிச் சம்பளம், சிறப்புத் தனிச் சம்பளம், அகவிலை ஊதியம், அகவிலைப்படி ஆகியவற்றின் அடிப்படையில் கணக்கிடப்படவேண்டும். வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி மற்றும் ஏனைய ஈட்டுப்படிகளை சேர்க்கக்கூடாது. பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (பணி–S) துறையின் 9.8.2010 ஆம் நாளிட்ட 111 ஆம் எண் அரசாணையில் கண்டுள்ளவாறு அரசுப் பணியாளர்கள் 'அ', 'ஆ', 'இ' மற்றும் 'ஈ' பிரிவினர் என வகைப்படுத்தப்பட வேண்டும்;

ii) 31.3.2015 அன்று பணியிலிருந்து, 1.4.2014 லிருந்து 31.3.2015 வரையில் ஓர் ஆண்டு முழுவதும் பணியாற்றிய பணியாளர்கள் 30/30 நாட்களுக்குரிய ஊதிய வீதத்தில் இந்த ஆணையில் அனுமதிக்கப்பட்டுள்ள மிகை ஊதியத்தொகை முழுவதையும் பெறத் தகுதி உடையவர்களாவர்;

iii) 2014–2015 ஆம் ஆண்டில் ஆறு மாதமும் அதற்கு மேலும், ஆனால் ஓர் ஆண்டுக்குக் குறைவாகப் பணியாற்றியுள்ள பணியாளர்கள், விகிதாச்சாரப்படி மிகை ஊதியம் பெறத் தகுதியுடையவர்களாவர். இவ்விதியில் செயல் நோக்கத்திற்காக, 15 நாட்களுக்குக் குறைவான பணிக்காலம் கருத்தில் கொள்ளப்படமாட்டாது; பதினைந்து நாட்களும் அதற்கு மேற்பட்ட பணிக்காலம் முழுமாதப் பணிக்காலமாகக் கருதப்படவேண்டும்;

iv) மிகை ஊதியம், முழு ரூபாய் மதிப்பில் கணக்கிடப்படும்; அதாவது, 50 காசுகளும் அதற்கு மேலும் இருந்தால், அடுத்த ரூபாய்க்கு முழுமையாக்கப்படவேண்டும்; 50 காசுகளுக்குக் குறைவான சில்லறை விட்டுவிடப்படவேண்டும்;

v) மிகை ஊதியத்தைக் கணக்கிடுவதற்கான பணிக்கால அளவில், சம்பளமில்லா விடுப்பு நீங்கலாக அனைத்து விடுப்புக்காலம் சேர்த்துக் கொள்ளப்படும். 2015 மார்ச்சு திங்களில் சம்பளமில்லா விடுப்பில் / அரை சம்பள விடுப்பில் / சம்பளம் இல்லாத கல்வி விடுப்பில் இருந்த பணியாளர்களைப் பொறுத்தவரையில், அவர்கள் விடுப்பில் செல்வதற்குமுன் கடைசியாகப் பெற்ற ஊதியத்தை அடிப்படையாகக் கொண்டு, மிகை ஊதியம் நிர்ணயிக்கப்படவேண்டும்;

vi) 2014–2015 ஆம் ஆண்டில் எப்போதாவது தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்த பணியாளர்களைப் பொறுத்தவரையில், தற்காலிகப் பணிநீக்கக் காலத்தில் வழங்கப்பட்ட பிழைப்பூதியத்தை ஊதியமாகக் கருதக்கூடாது. அத்தகைய பணியாளருக்கு அவருடைய தற்காலிகப் பணி நீக்கக் காலம், பணிக்காலமாக முறைப்படுத்தப்படும்போது மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கலாம். ஏனைய இனங்களில் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியத்தை வழங்குவதற்கு தற்காலிக பணி நீக்கக் காலத்தை சேர்க்கக்கூடாது. 31.3.2015க்குப் பிறகு தற்காலிகப் பணி நீக்கம் செய்யப்பட்டிருந்தால், மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் வழங்கத் தடை ஏதுமில்லை;

vii) 31.3.2015க்கு முன் வயது முதிர்வு காரணமாக ஓய்வுபெற்ற / தாமாகவே முன்வந்து பணியிலிருந்து ஓய்வு பெற்ற பணியாளர்கள் / பணியிலிருக்கும்போது காலம் சென்ற பணியாளர்கள் / பணியில் இருக்கும்போது பணியைத் தொடர இயலாத பணியாளர்கள் மேலே

பத்தி (iii)க்கு உட்பட்டு, அவர்கள் உண்மையில் ஆற்றிய பணிக்கால அளவின் அடிப்படையில் மிகை ஊதியம்/சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உடையவர்களாவர்;.

viii) வயது முதிர்வடைவதன்பேரில் ஓய்வு பெற்று மீண்டும் பணியில் அமர்த்தப்பட்ட பணியாளர்கள் மிகை ஊதியம் / சிறப்பு மிகை ஊதியம் பெற தகுதி உள்ளவர்கள் அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முன்பும் பின்பும் பணியாற்றிய மொத்தக் கால அளவு ஆறு மாத கால அளவுக்குக் குறையாமல் இருக்குமானால் மேலே பத்தி (ii) மற்றும் (iii)க்கு உட்பட்டு, அவர்கள் மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்கு முந்தைய மற்றும் பிந்தைய கால அளவுக்கான தகுதிப் பணிக்கால அளவு தனித்தனியாகக் கணக்கிடப்படவேண்டும். வயது முதிர்வடைந்து ஓய்வு பெறுவதற்கு முந்தைய கால அளவிற்கும், மீண்டும் பணியில் அமர்த்தப்படுவதற்குப் பிந்தைய கால அளவிற்கும் அனுமதிக்கத்தக்க மொத்த தொகை அனுமதிக்கத்தக்க மிகை ஊதியம்/சிறப்பு மிகை ஊதியத்தின் அளவிற்கு மிகைப்படாமல் வரையறை செய்யப்பட வேண்டும்; மற்றும்

ix) பிரிவு ‘இ’ யில் ஆறு மாதங்கள் மற்றும் அதற்கு மேல் பணிபுரிந்தவர்கள் விகிதாச்சார அடிப்படையில் மிகை ஊதியம் பெற தகுதிபடைத்தவர்கள் ஆவர். ஒரு பணியாளர் ஆறு மாதங்களுக்கும் குறைவாக தொகுதி ‘இ’ யில் பணிபுரிந்து, பின்னர் பிரிவு ‘ஆ’ வில் ஆறு மாதங்களுக்கு மேலாக பணிபுரிந்திருப்பாராயின் அவரது பணிக் காலம் முழுவதையும் கணக்கில் கொண்டு அவருக்கு முழு சிறப்பு மிகை ஊதியம் வழங்கப்படலாம்.

**//உண்மை நகல்//**

கெ. சிவமணி.

**பிரிவு அலுவலர்**